**2026 மார்ச் மாதம் 03– ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 108/2024**

O.S. No.: 108/2024 – கிருஷ்ணப்பிரியா PW1 03.03.2026

த/பெ.ராஜாராம்

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் திருச்சி, எடமலைப்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் பிரதிவாதி மீது விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1996 ம் ஆண்டு நான் பிறந்தேன் என்றால் சரியல்ல, 1994 ம் ஆண்டு பிறந்தேன். எனது தாத்தா வீராச்சாமி இறக்கும்போது எனக்கு வயது 14 என்றால் சரிதான். எனது தாத்தா இறந்தபின்பு பிரதிவாதி ஜான்சிராணி எனது குடும்பத்தை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல, எனது பாட்டி சுசீலா, எனது தந்தை ராஜாராம், எனது அம்மா உமாராணி அவர்கள் தான் குடும்பத்தை பார்த்து வந்தார்.

2. எனது தந்தை ராஜாராம் M.Sc., B.Ed., படித்து ஆசிரியராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். எனது தந்தை 1996 ம் ஆண்டு ஆசிரியர் படிப்பை முடித்து, சிறிது காலம் ஆசிரியராக வேலை செய்துவிட்டு, அதன்பின்னர் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு போதைப்பழக்கத்திற்கு அடிமையானதால் ஆசிரியர் பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, குடிப்பழக்கம் இருந்தது, ஆனால் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகவில்லை. எனது தந்தை உயிருடன் இருந்தப்போது எனது தந்தைக்கும், எனது தாத்தாவிற்கும் அடிக்கடி சண்டை வரும் என்றால் இருந்திருக்கலாம்.

3. நான் கடந்த 2014ம் வருடம் தான் 18 வயது பூர்த்தியாகி மேஜரானேன் என்றால் சரிதான். எனது தந்தை ராஜாராம் எனது தாத்தாவிற்கு 1999ம் வருடம் பாகப்பாத்திய விடுதலை எழுதிக்கொடுக்கும்போது எனது வயது 6 என்றால் சரியல்ல, 5 வயது ஆகும். எனது தாத்தா 2001ம் வருடம் பிரதிவாதிக்கு உயில் சாசனம் எழுதிவைத்த சமயத்தில் எனக்கு வயது 6 இருக்கும் என்றால் சரிதான். மேற்படி விடுதலை ஆவணமும், உயில் சாசனமும் எழுதப்பட்டபோது எனக்கு என்ன நடந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்.

4. எனது தந்தை எனது தாத்தாவிற்கு எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணத்தைப் பற்றியும், எனது தாத்தா பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனம் பற்றியும் எனது தாயாருக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியாது. எனது தந்தை ராஜாராம் எனது தாத்தாவிற்கு எழுதிக்கொடுத்த 16.06.1999ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலை பத்திரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை ஆவணம் எனது தந்தையிடம் எழுதிவாங்கிய அதே தேதியில் எனது தாத்தா பிரதிவாதியை கட்சியாக சேர்க்காமல் 1999ம் வருடத்தில் ஓர் ஆவணம் எழுதிக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. 1999ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணம் எனக்கு தெரியும் என்றால் சொத்து கொடுத்தது மட்டும் தெரிந்துக்கொண்டேன். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தின்படி ரூ.1,66,500/– மதிப்புள்ள பி செட்டியூல் சொத்து எனது தந்தைக்கு கிடைக்கப்பெற்றது என்றாலும், எனது தாத்தாக்கு ஏ செட்டியூல் பாகமாக ரூ.32,066/– மதிப்புள்ள சொத்துக்கள் கிடைக்கப்பெற்றது

என்றால் தற்போது தான் நான் பார்த்தேன், விடுதலை பத்திரத்தில் சொத்து மதிப்பு குறிப்பிடவில்லை. அந்த 1999ம் வருட பாகப்பிரிவினை ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் மேற்படி விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1999ம் வருட பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களை எனது தந்தை பல பேருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களில் பிரதிவாதிக்கும் உரிமையுண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயில் சாசனத்தை பற்றி பிரதிவாதி என்னிடமும், எனது தாயாரிடமும் எனது திருமணத்திற்கு முன்பே கூறியிருந்தார் என்றால் சரியல்ல, எனது தந்தை இறந்த 2 வருடங்கள் பின்பு 2024ம் வருடம் தெரிந்துக்கொண்டேன்.

7. எனது திருமணத்தில் பிரதிவாதி குடும்பத்துடன் கலந்துக்கொண்டார் என்றால் சரியல்ல, பிரதிவாதியும், அவரது மகனும் அரை மணிநேரம் இருந்து கலந்துக்கொண்டார்கள். எனது திருமணத்தின்போது எங்களுக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா 1, 2 லக்க சொத்துக்களுக்கு வில்லங்கச் சான்று பார்த்தேன் என்றால் சரிதான். அந்த வில்லங்கச் சான்றை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் கூறியுள்ள எனது தந்தை எனது தாத்தாவிற்கு எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணமும், எனது தாத்தா பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசன ஆவணமும் எழுதிக்கொடுத்தப்போது எனக்கு சுமார் 6 வயது என்றாலும், மேற்படி இரண்டு ஆவணங்களை எழுதிக்கொடுக்கும் சமயம் நான் இளவர் என்பதால் மேற்படி விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், பிரதிவாதி

அனுபவித்து வரும் வழக்கு 1, 2 லக்க சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான தகவல்களை வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. உயில் சாசனமும், விடுதலை ஆவணமும் வில்லங்கச் சான்றிதழ் மூலம் பார்வைக்கு வர பதிவுத்துறையில் வேறு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் உயிலில் பதிவு, வில்லங்கச் சான்றிதழில் தெரியவராததாலும், 2024ல் வில்லங்கச் சான்றிதழை பார்த்து வழக்கு மூலத்தை தெரிந்துக்கொண்டேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 03.03.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.03 18:18:24 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
03.03.2026.